**கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, தேறிய சொத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்பிற்காக காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ளாது ஓய்வூதியப் பொறுப்பு நிதிக் | 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிப் பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டமானது சுயநிதியினை அடிப்படையாகக் கொண்டிருக்காததனால் எதிர்காலத்தில் திட்டத்தை | ஓய்வூதியப் பொறுப்பானது காப்பீட்டு கணிப்பு மதிப்பீட்டின் பிரகாரம் கால ரீதியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அந்த மீதி ரூபா 4,261,454,710 ஆகும். | மீளமைப்புச் செய்து முறைப்படியாக பொறுப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்பொழுது ஓய்வூதியத் திட்டத்தை விரிவுபடுத்தி நியாயமான பங்களிப்பினை ஓய்வூதியப் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வது தொடர்பான கலந்துரையாடல் அமைச்சிற்கும் சபைக்குமிடையே நடைபெற்று வருகின்றது. அதற்கிணங்க எதிர்காலத்தில் இது தொடர்பாக முறையான வகையில் புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை தயாரிப்பதற்கு முடியுமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். இதற்கிணங்க அமைச்சரவைப் பத்திரம் தற்பொழுது கடற்றொழில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) 2009 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக 121 கடற்றொழிலாளர் களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையான ஓய்வூதியம் ரூபா 3,685,792 தொகையானது முன்னைய ஆண்டிற்குச் செம்மையாக்கப்படாது மீளாய்வாண்டிற்கான செலவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஓய்வூதியத்திற்குத் தகைமையுள்ள 121 கடற்றொழிலாளர் களுக்குரிய நிலுவையான ஓய்வூதியத்தை ஒதுக்கிடு செய்தலானது 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளினூடாக செம்மையாக்கி சரி செய்யப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகளுக்கான ஓய்வூதியம் அந்த ஆண்டுகளுக் செம்மையாக்கப் படுதல் வேண்டும். |
| (ஆ) செலுத்த வேண்டிய மரணப் பணிக் கொடை | இந்நிலைமையை 2021 ஆம் ஆண்டின் போது சரி | சரியாக கணக்கு வைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| நிதியத்தின் ரூபா 98,000 தொகையான ஆரம்ப மீதியை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யும் போது தேறிய நிவாரணப் பணச் செலவுகள் கணக்கின் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறைகளையும் மரணப் பணிக்கொடை நிதியமும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ஓய்வூதிய பொறுப்பு ரூபா 4,261,454,710 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டினை விட 8.83 சதவீதத்தினால் அதிகரிப்பாகும். அவ்வாறே திரண்ட நிதியத்தில் தேறிய சொத்துக்கள் நிலைமையானது ரூபா 3,675,902,450 மறைப் பெறுமதி வரை அதாவது முன்னைய ஆண்டினை விட 11.76 சதவீதம் அதிகரித்திருந்ததனால் அதுவும் திட்டத்தின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் அடுத்துவரும் ஆண்டுகளின் போது இந்நிலைமையானது மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருப்பதனால் அது தொடர்பாக கவனம் செலுத்தி திட்டத்தை மீளமைப்புச் செய்து நிதி சாத்திய வளத்தன்மையுடன் அமுல்படுத்துவதற்கு திட்டம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசாங்க கொள்கைகளின் அடிப்படையில் இத்திட்ட்தின் நலன்களானது தவணைப் பணங்களை அதிகரிக்காது மேற்கொள்வதன் காரணமாக பங்களிப்பாளர்களுக்கு தகைமையுள்ள அரசாங்க நிவாரணங்களின் அளவு அதிகரித்துள்ளது. எனவே நிதியத்தின் மறைப் பெறுமதியின் தாக்கம் அதிகரித்துச் சென்று காணப்படுவதுடன் இதனைத் தீர்த்து வைப்பதற்காக அரசாங்க நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்படுவதுடன் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் தேவையான நிதியத்தை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திட்டத்தினை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிலிருந்து கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திலிருந்து விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு பல சந்தர்ப்பங்களின் போது ரூபா 518,000,000 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டிப் பணம் ரூபா 338,949,572 கூட்டுமொத்தமாகும். | தற்பொழுது ரூபா 338.9 மில்லியன் பணம் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்திடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதுடன் கடன் பணமும் அவை மீதான வட்டியும் மேற்கூறிய மீதியினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அறிவிட வேண்டியுள்ள மிகுதிக் கடன் பணத்தை படிப்படியாக அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்ட அதிகாரச்சட்டம் | | | |
| (i) 5 மற்றும் 6 ஆம் பிரிவுகள் | நிர்ணயிக்கப்பட்ட தகமைகளைக் கொண்ட 18 வயதிற்கு குறையாத மற்றும் 59 வயதிற்கு மேற்படாத கடற்றொழிலாளர்களுக்கு தமது தொழில்சார் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாது நிரந்தரமான அரைகுறையான இயலாமைக்கு அல்லது முழுமையான இயலாமைக்கு உள்ளாகுகையில் பொருளாதார ரீதியாக ஏதாவது ஆறுதல் பெறுவதற்கு ஒரு | புதிய ஓய்வூதியத் திட்டத்தினை ஆரம்பிப்பதற்குத் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் புதிய ஆட்சேர்ப்புக்களை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. | திட்டத்தை செயற்பாடுள்ள தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | படியினைச் செலுத்துதல் மரணத்தின் போது மரணப் பணிக்கொடையைச் செலுத்துதல், மற்றும் 60 வயதினைப் பூர்த்தி செய்கையில் காலப்பகுதிக்கு இணங்க ஓய்வூதியத்தினை செலுத்தும் குறிக்கோளுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு எந்தவொரு அங்கத்தவரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 7 ஆம் பிரிவு | பங்களிப்பாளர்கள் 60 வயதினைப் பூர்த்தி செய்த திகதியிலிருந்து ஓய்வூதிய நிதியத்திற்கு தகைமை பெறுகின்ற போதிலும் திட்டத்தினால் ஓய்வுதியம் தயாரித்த திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் நிலுவையான ஓய்வூதியப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2009 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான காலத்திற்குரிய ஓய்வூதியங்களை வேண்டிக் கொண்ட 176 மீனவர்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட நிலுவையான ஓய்வூதியம் ரூபா 4,828,177 தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய நிலுவையான ஓய்வூதியத்தினைச் செலுத்துதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் காரணமாக இந்நிலை உருவாகியுள்ளதுடன் உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஓய்வூதியத்திற்கு தகைமை பெற்ற திகதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | 16 ஆம் பிரிவு | பங்களிப்பாளர் பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்காக தவணைப் பணங்களை முறையாகச் செலுத்தாததன் | மாவட்ட கடற்றொழில் விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் தவைணப் பண அறவீட்டினை மேற்கொள்வதுடன் பங்களிப்பு | தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களுக்கான தவணைப் பணத்தை செலுத்தாதன் அடிப்படையில் நலன்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், அந்த அறிவிப்பு செய்யப்படாமையின் காரணமாக 60 வயதினைப் பூர்த்தி செய்த ஓய்வூதியத்தினைப் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளவர்கள் எனக் கருதி 58 நபர்களினால் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இரத்துச் செய்யப்பட்ட பங்களிப்பாளர்களின் பங்களிப்பு பணம் 60 வயதினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் வட்டியுடன் மீளச் செலுத்தப்படும். கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீண்டும் இடம்பெறாமைக்கு உரிய தெரியப்படுத்துதல்கள் செய்யப்படும். | இழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளர்களுக்குத் தெரியப் படுத்துதல் வேண்டும். |
| (iv) | 20 ஆம் பிரிவு | தோற்றுவிக்கப்பட்டு ஆலோசனை தெரிவுக் குழுவினால் அதிகாரச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் மூலம் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அமுல்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அதற்காக ஆலோசனை தெரிவுக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்று வரை தெரிவுக் குழு கூட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புதிய ஆட்சேர்ப்புக்களை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதனால் விரைவாக ஆலோசனை தெரிவுக் குழுவினைக் கூட்டுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனைத் தெரிவுக் குழு கூட்டப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,281,891 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 16,207,069 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 24,074,822 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் கடற்றொழிலாளர்களின் பங்களிப்பு பணம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **முகாமைத்துவ செயற்திறனின்மை.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத் திட்டத்தின் 2020 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் கடற்றொழிலாளர் ஓய்வூதிய அட்டைகளைப் பாதுகாப்பதற்காக மாவட்டத்திற்கு இணங்க அட்டைகளைப் வகைப்படுத்துதல், அட்டைகளை ஸ்கேன் செய்தல் (Scan) களஞ்சியப்படுத்துதல் என்பவற்றைப் போல கடற்றொழில் ஓய்வூதியம் பெறுபவர்களின் தரவுகளை “ஆவண முகாமைத்துவ முறைமை” (Document Management System) இன் மூலம் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக ஆவணக் காப்பகத்தை தயார்ப்படுத்துவதற்கும் பதிய கணனி முறைமையை தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016-2020 இணைந்த திட்டத்தில் உள்நாட்டு விவசாயிகளுக்கு நிரந்தர தன்மையை வழங்குவதற்காக காணப்படுகின்ற சமூக பாதுகாப்பு திட்டத்தை நாளதுவரையாக்குதல் மற்றும் புதிய பாதுகாப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணப்படுகின்ற கடற்றொழிலாளர் | புதிய அரசாங்கத்தின் சௌபாக்கியத்தின் தூர நோக்கு கொள்கை வெளிப்படுத்துகையினுள் புதிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதனால் அந்த அரசாங்க கொள்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஓய்வூதியத் திட்டத்தை காலத்திற்குப் பொருத்தமான தேவைப்பாடுகளுக்கு இணங்க திருத்தம் செய்து புதிய கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் அல்லது காணப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளலானது கடந்த சில ஆண்டுகளாக காணப்படவில்லை.